ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 1.6 – பரிவதில்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 1.6 – பரிவதில்

‡ பரிவதில் ஈசனைப் பாடி ⋆
விரிவது மேவல் உறுவீர் ! ⋆
பிரிவகை இன்றி நன்னீர் தூய் ⋆
புரிவதுவும் புகை பூவே ॥ **1.6.1** ॥

மதுவார் தண்ணம் துழாயான் ⋆
முது வேத முதல்வனுக்கு ⋆
எதுவேதென் பணி என்னாது ⋆
அதுவே ஆட்செய்யும் ஈடே ॥ **1.6.2** ॥

ஈடும் எடுப்பும் இல் ஈசன் ⋆
மாடு விடாதென் மனனே ⋆
பாடும் என் நா அவன் பாடல் ⋆
ஆடும் என் அங்கம் அணங்கே ॥ **1.6.3** ॥

அணங்கென ஆடும் என் அங்கம் ⋆
வணங்கி வழி படும் ஈசன் ⋆
பிணங்கி அமரர் பிதற்றும் ⋆
குணங்கெழு கொள்கையினானே ॥ **1.6.4** ॥

கொள்கை கொளாமை இலாதான் ⋆
எள்கல் இராகம் இலாதான் ⋆
விள்கை விள்ளாமை விரும்பி ⋆
உள் கலந்தார்க்கோர் அமுதே ॥ **1.6.5** ॥

அமுதம் அமரர்கட்கீந்த ⋆
நிமிர் சுடர் ஆழி நெடுமால் ⋆
அமுதிலும் ஆற்ற இனியன் ⋆
நிமிர் திரை நீள் கடலானே ‖ **1.6.6** ‖

நீள் கடல் சூழ் இலங்கைக் கோன் ⋆
தோள்கள் தலை துணி செய்தான் ⋆
தாள்கள் தலையில் வணங்கி ⋆
நாள் கடலைக் கழிமினே ‖ **1.6.7** ‖

கழிமின் தொண்டீர்கள் கழித்துத் ⋆
தொழுமின் அவனைத் தொழுதால் ⋆
வழி நின்ற வல்வினை மாள்வித்து ⋆
அழிவின்றி ஆக்கம் தருமே ‖ **1.6.8** ‖

தரும அரும் பயனாய ⋆
திருமகளார் தனிக் கேள்வன் ⋆
பெருமை உடைய பிரானார் ⋆
இருமை வினை கடிவாரே ‖ **1.6.9** ‖

கடிவார் தீய வினைகள் ⋆
நொடி ஆரும் அளவைக் கண் ⋆
கொடியா அடு புள் உயர்த்த ⋆
வடிவார் மாதவனாரே ‖ **1.6.10** ‖

‡ மாதவன் பால் சடகோபன் ⋆
தீதவம் இன்றி உரைத்த ⋆
ஏதம் இல் ஆயிரத்திப்பத்து ⋆
ஓத வல்லார் பிறவாரே ‖ **1.6.11** ‖

அடிவரவு — பரிவதில் மதுவார் ஈடும் அணங்கென கொள்கை அமுதம்
நீள்கடல் கழிமின் தரும கடிவார் மாதவன் பிறவி

பரிவதில் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்